[1974 ஏப்ரல் 15

கிருஷ்ணராயபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

* 829 வினு.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற் காக ரூ. 10,000 அடையாள நன்கொடைத் தொகையும் 5 ஏக்கர் நிலமும் இருக்க வேண்டும் என்று விதி உள்ளது. கிருஷ்ணராயபுரத்தில் 5 ஏக்கர் நிலம் கிடைக்கப் பெருததால், 5 ஏக்கர் நிலம் கிடைக்கப் பெற்றுள்ள கோவ குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவது பற்றி நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தச் சுகாதார நிலையம் கட்டும் பிரச்சினை பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. விரைவில் அரசு முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எந்த இடத்தில் கட்டுவது, யார் இடம் தருகிருர்கள் என்பது நீண்ட காலப் பிரச்சினை. இப்போது ஏற்றுக்கொள்ளப் பட்ட பின்னர் முதலில் அந்த இடத்தில் குடும்ப நல மருத்துவ மனை கட்டப் படும். அதற்குப் பின்னர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுகிற முறைப்படி நிதி கிடைக்கிற வசதிக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ மனைக் கட்டடம் கட்டப்படும். அந்தப் பணிகள் இப்போதே துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

செவிலியர்கள் நியமனம்

* 830 வினு.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்டு மாதம்வரை வேலையில்லாமல் இருக்கும் நர்சுகள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள வடிக்கை யாது ?